[1972 ஆகஸ்டு 9

அனைத்திலும் உள்ள ஊர்ப்பெயர் பலகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினுக்கள் முடிவடைந்தன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

1. வினுக்களுக்கு விடையளிப்பது குறித்து

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இன்றையதினம் வந்துள்ள கேள்விகளில் 3 கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் பதிலளிக்க வேண்டியவையாகும். இந்தக் கேள்விகள் பட்டியலில் இருந்தும் கூட அமைச்சர் வராமலிருப்பது உள்ளபடியே சபைக்கு மதிப்பளிப்பதாக இல்லை. அவருக்கு உடல் நலமில்லை யென்றால், முதலில் தெரிவித்திருந்தால் கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சருக்கு உடல் நலக்குறைவு இன்றைக்கு ஏற்படும் என்று நேற்று முந்தாநாள் தெரியாது. அவர் வராததற்கு உடல் நலக் குறைவுதான் காரணம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இப்படிப் பல தடவை நடப்பதால் இன்றைய தினம் சொன்னேன்.

4. அறிவிப்புகள்.

(1) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு வீதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியுள்ளது என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப் பட்டுள்ளன.

வேட்புமனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும்.	18—8—72 முற்பகல் 11 மணி
வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல்	18—8—1972 நண்பகல் 12 மணி
வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும்	19—8—1972 முற்பகல் 11 மணி
தேவைப்பட்டால், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும்	21—8—1972-ல் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை

வேட்பு மனுப் படிவத்தைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(2) அலுவல் ஆலோசனைக் குழுவிற்கு இரு உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, திரு. ஏ. ஆர். தாமோதரன், ஆகியோரின் மேலவை உறுப்பினர் பதவிக் காலம் முடிவடைவதால் ஏற்படும் காலி இடங்களில் 1971-72 ஆண்டுக்கான அலுவல் ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக திரு. ம. பொ. சிவஞானம், திரு. ஏ. ஆர். தாமோதரன் ஆகியோரை தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை 166(4) விதியின் கீழ் நியமித்திருப்பதாக மேலவைக்கு நான் அறிவிக்கிறேன்.

(3) அலுவல் ஆலோசனைக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following programme of Business has been decided :

9th August 1972 (Wednesday)	..	The Constitusion (Twentyeighth) Amendment Bill, 1972.
10th August 1972 (Thursday)	..	No meeting.
17th August 1972 (Thursday)	..	No meeting.
18th August 1972 (Friday)	..	Government Business.

Further programme of business will be decided later. The House will meet from 4 p.m. to 7 p.m. daily.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS